


# மாற்றுத்திறனாளிகள் பற்றிய மதிப்பீடும், வாழ்க்கைத் தரத்த உயர்த்துவதற்கான சிபாரிசுகளும் -
# பாலமுனை, ஒலுவில் திராய்க்கேணி பிரதேசம் பற்றிய விசேட ஆய்வு




**A.M.M.முஸ்தபா**
சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல்
முகாமைத்துவத் துறை,
முகாமைத்துவ வர்த்தக பீடம்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# மாற்றுத்திறனாளிகள் பற்றிய மதிப்பீடும், வாழ்க்கைத் தரத்த உயர்த்துவதற்கான சிபாரிசுகளும் - பாலமுனை, ஒலுவில் திராய்க்கேணி பிரதேசம் பற்றிய விசேட ஆய்வு

இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மானியமாக ரூபா. 50,000.00 (Research Grant) பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**A.M.M.முஸ்தபா**
சிரேஷ்ட விரிவுரையாளர் - வியாபாரப் பொருளியல்
முகாமைத்துவத் துறை,
முகாமைத்துவ வர்த்தக பீடம்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2009

## 1.1 ஆய்வின் அறிமுகம்

இன்று உலகலாவிய ரீதியில் மாற்றுத் திறனாளிகள் தொகை அதிகரித்து காணப்படுகிறது உலகில் ஏற்படும் அசாதாராண சூழ்நிலைகள், பிறப்பு, நோய் போன்றவற்றினால் மாற்றுத் திறனாளிகள் அதிகரித்துள்ளனர். மாற்றுத் திறனாளிகள் பற்றி ஆய்வுகள் உலகளாவிய ரீதியில் அதிகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எமது ஆய்வுக்கு உட்படுத்தப்படும் பாலமுனை. ஒலுவில், திராய்க் கேணி பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகள் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகள் எனும் பதமானது "Disable", "Different able" எனும் ஆங்கிலச் சொல்லின் மூலம் அழைக்கப்படுகிறது. இதற்கு " இயலாமை" "விஷேட தேவையுடையவர்" எனும் பொருள்கள் கொள்ளப்படுகிறது. இதற்கு உலகளாவிய ரீதியில் இவர்களை ஆங்கிலத்தில் "Impairment" "handicap' எனும் பதங்கள் முறையே "வலுக்குறைவு" "வெற்றியடைவதில் இடர்பாட்டு நிலை அல்லது கை ஏந:துவோர் " எனப் பொருள் கூறப்படுகிறது

உலகளாவிய ரீதியில் மாற்றுத் திறனாளிகள் பற்றி பல்வேறு ஆய்வுகள் காணப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் யார் என நாம் நோக்கும் போது குறைபாடுகளை அல்லது இழப்பை அல்லது அசாதாரண உடலியல் செயற்பாடுகளை உடையோராவர். இது நிரந்தரமாகவோ, தற்காலிமாகவோ காணப்படலாம். இக்குறைபாடு மனிதனின் இயல்பான நடத்தையில் ஏற்படும் அசாதாரண நிலைப்பாடாகும். மனிதன் தனது இயல்பான நடத்தையின் மூலமே அவனது ஏனைய செயற்பாடுகளை முறையாக மேற்கொள்கிறான். அவனுக்கு தடையாக அவனது உடலில் ஏற்படும் தடைகளையே நாம் இயலாமை அல்லது அவர்களை மாற்றுத் திறனாளிகள் என அழைக்கின்றோம்.

ஆய்வுக்கு உட்படுத்தப்படும் ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகிறது. இப்பிரதேசம் கிராமிய வழக்காறுகளையும், கல்வியில் பின் தங்கிய நிலையிலும் காணப்படுவதினால் மாற்றுத் திறனாளிகள் நலனோம்பு விடயங்கள் குறைவாக காணப்படுகின்றன. இப்பிரதேசம் 1980 காலப்பகுதியிலிருந்து இன வன்முறைகளுக்கு உட்படுவதினாலும், பிறப்பின் போது ஏற்படும்

சுகாதார பராம்பரியத் தன்மையினாலும், மருத்துவத்தின் சேவைகள் கிடைக்காமையினாலும் இவ்வாறான பாதிப்புக்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

இவர்களது வாழ்க்கை முறை தொடர்பாகவும் இவர்களது வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல் தொடர்பாகவும் முறையான செயற்பாடுகள் போதுமான அளவு முன்வைக்கப்படாமையினால் இவர்கள் சமூக பொருளாதார ரீதியாக பின்னடைவுகளை எதிர்நோக்கி காணப்படுகின்றனர்.

## 1.2 ஆய்வின் முக்கியத்துவம்

ஆய்வுப் பிரதேசமான ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பிரதேசம் பாரம்பரிய விவசாயக் கிராமாகும். அண்மைக் காலத்தில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளான துறைமுக அபிவிருத்தி, தென்கிழக்கு பல்கலைக் கழக வளர்ச்சி, போன்றவற்றினால் அபிவிருத்தியடைந்து வருகின்றது. இதனால் இப்பிரதேசத்தில் வாழும் மக்களும் சமூக, பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து வரும் இத்தருணத்தில் " மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல்" தொடர்பான இப் பிரதேச ஆய்வு மிக முக்கியத்துவம் வாய்ந்தாகும்.

இவர்களின் தேவையினையும், அவர்களின் ஆற்றலையும் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல் தொடர்பாக முன்வைக்கப்படும் தீர்வுகள் முக்கியமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாய்வு இக் கிராமத்தைப் போன்ற ஏனைய கிராமங்களுக்கும் சிறந்த முன்மாதிரி ஆய்வாக காணப்படும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

## 1.3 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுக்குட்படுத்தப்படும் பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி பிரதேச மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கை தரம் அண்மைக் காலமாக முன்னேறி வருகின்ற போதும் விஷேட தேவையுடைவர்களின் வாழ்க்கை தரம் ஏன் உயர்த்தப்பட வில்லை. அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதில் ஏற்படுத்தப்படும் தடைகளை கண்டறிதல்

## 1.4 ஆய்வுக் கருதுகோள்

இவ்வாய்வின் கருதுகோள்களாக பின்வருவன முன்வைக்கப்படுகிறது

01. ஆய்வுக்குட்படுத்தப்படும் ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரம் உயரவில்லை.

### 1.5 ஆய்வின் நோக்கம்

1. ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, போன்ற பிரதேசங்களில் காணப்படும் விஷேட தேவையுடையவர்களை இனம் காணுதல்.
2. இப்பிரதேசத்தில் வாழும் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான நுட்பமுறைகளை முன்வைத்தல்

## 1.6 ஆய்வு முறையியலும், தகவல் சேகரிப்பும்

ஆய்வுக்கான தரவுகள் முதலாம் நிலை, இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்தும் தகவல்கள் பெறப்படும். இந்த ஆய்வு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டும், பகுப்பாய்வு முறைகளான தொகுத்தறி முறையைப் பிரதானமாகவும், உய்த்தறி முறையைத் துணையாகவும் கொண்டுள்ளது.

இத் தகவல்கள் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திரட்டப்பட்டுள்ளன.

1. முதலாம் நிலைத் தரவுகள்
2. இரண்டாம் நிலைத் தரவுகள்

இங்கு அதிகமாக ஆய்வுக் களத்துக்கு சென்று தகவல்கள் திரட்டப்படுகின்றன. ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பிரதேசங்களில் வாழும் மாற்றுத் திறனாளிகளினை நேரடி பேட்டி காண்பதன் மூலமும் அவதானம், கலந்துரையாடல் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளாக புள்ளிவிபரங்கள், ஆவணங்கள், அட்டவணைகள், வரிப்படங்கள், நூல்கள், சஞ்சிகைகள், அரச, அரச சாரா நிறுவனங்களின் அறிக்கைகள் என்பனவும் இவ் ஆய்வினை மேற்கொள்ள துணைபுரிந்தன.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் எளிய புள்ளிவிபரவியல் முறைகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவுகள் பெறப்படும்

### 1.7 ஆய்வுப் பிரதேசம்

அம்பாரை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் ஒலுவில் பாலமுனை, திராய்க்கேணி கிராமங்களில் காணப்படும் மாற்றுத் திறனாளிகளினை மையமாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தின் எல்லைகளாக வடக்கே களியோடையாற்றினையும், கிழக்கே இந்து சமுத்திரத்தினையும், மேற்கே தீகவாபி பிரதேசத்தையும், தெற்கே அட்டாளைச்சேனை பிரதேசத்தையும் கொண்டு காணப்படுகின்றது. இதன் பரப்பளவு 94.495 சது கிலோ மீற்றராகும்.

ஆய்வு பிரதேசத்தின் சனத்தொகையினை நோக்கும் போது பாலமுனை 5 கிரம சேவகர் பிரிவுகளில் 8747 மக்கள் வாழ்கின்றனர். ஒலுவில் 7 கிராம சேவகர் பிரிவில் 8590 மக்கள் வாழ்கின்றனர். திராய்க்கேணி பிரதேசத்தை நோக்கும் போது 1496 ஆகவும் காணப்படுகிறது. இதில் 2% மக்கள் விஷேட தேவையுடைய மக்களாக காணப்படுகின்றனர்.

அண்மைக் காலமாக இப்பிரதேசங்களில் ஏற்பட்டு வரும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளினால் இப்பிரதேசம் சமூக, பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை தரம் முன்னேறியுள்ளதனை ஆய்வின் போது அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனினும் ஒலுவில் பிரதேச மக்கள் மீன்பிடியினை அதிகமாக நம்பி வாழ்வதனால் அவகளின் தொழில் துறைமுக வேலைத்திட்டத்தினால் பாதிப்படைந்துள்ளது. இதனால் இவர்களது வருமானம் தடைப்பட்டுள்ளது. எனினும் துறைமுகத்தில் கிடைத்த தற்காலிக ஒப்பந்த வேலையின் மூலம் தாம் தொழில் பெற்று முன்னேறியுள்ளனர். தற்போது இவ் ஒப்பந்த வேலை முடிவுற்றதினால் பொருளாதாரச் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர். தற்போது தறைமுக வேலை எமக்கு கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டில் மன உறுதித் தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது.

திராய்க்கேணி மக்கள் அதிகமாக சேனைப் பயிர் செய்கையில் ஈடுபடுவதினால் அவ்வப்போது ஏற்படும் காலநிலை மாற்றத்தினால் அழிவுகளை பெற்றுள்ள போதிலும் அவர்களது உற்பத்திக்கு அதிக கேள்வி நிலவுவதால் அவர்களது வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளதாக அறிய முடிந்தது. எனினும் திராய்க்கேணி பிரதேசத்தில் வாழும் மாற்றுத் திறனாளிகள் வசிக்கும் குடும்பங்கள் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பாலமுனை பிரதேச மக்கள் அதிகமாக விவசாய தொழிலை நம்பிக் காணப்படுவதால் அவர்களது வாழ்க்கைத் தரம் துறைமுக அபிவிருத்தி. மற்றும் ஏனைய அபிவிருத்திகளினால் முன்னேற்றம் அடைந்துள்ளதாகவே கருதுகின்றனர்.

பொதுவாக இம்மூன்று கிராமங்களின் வாழ்க்கை தரத்தினை நோக்கும் போது சென்ற காலங்களில் முன்னேறியுள்ளதினை அறிய முடிந்த போதிலும் மாற்றுத் திறனாளிகள் வசிக்கும் குடும்பங்களில் சிரமமான பொருளாதாரத்துடனும் சமூக தாழ்வு மனப்பான்மையுடனும் வாழ்வதினை காணலாம்.

## 1.8 ஆய்வின் வரையறைகள்

இவ்வாய்வு பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சில குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகிறது. ஆய்வு தொடர்பான தகவல்களைத் திரட்டும் போது எதிர் கொண்ட இடர்களின் காரணமாக பூரணமாக சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி பிரதேச மக்கள் இருக்கமான சமூக கலாச்சார பிணைப்புக்குள் உட்பட்டுள்ளதனால் இவர்களிடமிருந்து மாற்றுத் திறனாளி பிள்ளைகளைக் கண்டறிவது சற்று சிரமானதாகும். அத்தோ்டு அரச, அரச சாரா நிறுவனங்களிலும் மாற்றுத் திறனாளிகளின் தகவல்கள் காணப்படாமையினால் தகவல் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டது

அத்தோடு மாற்றுத் திறனாளிகள் படிக்காதவர்களாக காணப்படுவதினால் அவர்களிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தகவலைப் பெற முடியாதுள்ளது. மாற்றுத் திறனாளிகளுடன் உரையாடல்கள் மேற்கொள்ளும் போது ஏற்படும் விளங்கிக் கொள்ளுதல் தொடர்பான பிரச்சினை, அவர்கள் தகவல்களை வெளிக் காட்டப்படும் போது ஏற்படும் உடலியல் ரீதியான சிக்கல்களைக் குறிப்பிட முடியும்

சில மாற்றுத் திறனாளிகள் உரையாட முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இதனால் அத்தகவல்கள் அவர்களின் குடும்பங்களிடமிருந்து பெறப்பட்டதனால் தகவல்கள் பெறுவதில் சிக்கல்கள் எதிர் நோக்கப்பட்டது.

இவ்வாறாக எனது ஆய்வு சில வரையறைகளைக் கொண்டிருப்பதால், இப்பிரதேசம் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்ளும் இனிவரும் ஆய்வாளர்கள் மேற்குறிப்பிட்ட வரையறைகளை நீக்கி சிறந்த முறையில் மேற்கொண்டால் அவ்வாய்வு மேலும் சிறப்புடையதாக இருக்கும்.

## 1.9 நூலாய்வு

ஆய்வுக்குட்படுத்தப்படும் பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி பிரதேசங்களில் மாற்றுத்திறன் உள்ளவர்கள் பற்றிய ஆய்வு இதுவரையில் இடம்பபெறவில்லை. இதுவே இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் முதல் மாற்றுத்திறன் உள்ளவர்கள் பற்றிய ஆய்வாகும். எனவே இவ்வாய்வுக்கு தேவையான இரண்டாம் நிலைத் தரவுகளாக நூலாய்வு காணப்படுகிறது. இது பின்வரும் நூல்களிலிருந்தும் சஞ்சிகைகளிலிருந்தும் இணையத்திலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டன.

DR. Karna G.N. (1999) vOjpa Uniter nations and Rights of disable persons : A study in indian perspective'' இந்நூல் மாற்றுதிறன் பற்றிய வரைவிலக்கணத்தையும், அவற்றின் பாகுபாடு பற்றியும் பிரகடனங்கள் பற்றியும் விளக்குகின்றது. Asha Hans, Annie Patri (1999) Women Disability and identity எனும் நூலில் மாற்றத்திறன் உள்ள பெண்கள் பற்றியும் 1981 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் பற்றியும் விளக்குகின்றது. இது சமூகவியல் ரீதியாக ஆராயப்பட்டுள்ளது. சின்கிளேயர் பீற்றர் (2009) என்வரால் நிலநோக்கு இதழில் ''அங்கவீனர்களின் உரிமைகள்'' எனும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையில் இலங்கையின் அங்கவீனர்கள் பற்றி விளக்குகின்றது. ரசீன் ஜே.டி.எம்.(2006) திகதி என்பவரால் எழுதப்பட்ட கலையமுதம் எனும் இதழில் மாற்றுதிறனுள்ள பிள்ளைகளின் கல்வியும் அவர்களின் தேவை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. பெரேரா, எம்.ஆர். (2007) எழுதிய '' வெற்றிகரமான வாழ்க்கைக்கான உதவிக்கரம்'' எனும் உளவளத்துணை நூலில் மாற்றுதிறன் உள்ளவர்களுக்கான உளவளத்துணை விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது.

www.wikipidia.org எனும் இணையத்தளத்திலிருந்து மாற்றுத்திறன் என்பதற்கான வரைவிலக்கணங்கள் மற்றும் அதன் விளக்கவுரைகளும் தரப்பட்டுள்ளன. www.adp.org எனும் இணையத்தளத்தில் இருந்து மாற்றுதிறன் பற்றியும், வகைப்பாடு பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. www.satastics.gov.lk எனும் இணைத்தளத்தில் இலங்கையில் மாற்றுதிறன் உள்ளவர்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் தரப்பட்டுள்ளன. www.das.kucrl.org என்ற இணையத்தளம் மாற்றுத்திறன் என்ற பதத்தின் தோற்றம், அதனது வளர்ச்சிப்படி நிலமைகளைப் பற்றி எடுத்துக் காட்டுகிறது.

அம்பாரை மாவட்டத்தில் பல அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி பிரதேசங்களில் மாற்றுத்திறன் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரம் பற்றிய ஆய்வு தனியாக ஆராயப்படவில்லை. இவ் இடைவெளியினை பூர்த்தி செய்யும் அடிப்படையில் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

# அத்தியாயம் 2

## 2.0 மாற்றுத் திறனாளிகள் பற்றிய கண்ணோட்டம்

உலகளாவிய ரீதியில் நோக்கும் போது ஐக்கிய நாடுகள் சபை டிசம்பர் 3ம் திகதியை மாற்றுத் திறனாளிகள் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. அத்தோடு 1981ம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் ஆண்டாகவும் அனுஷ்டிக்கப்பட்டது. அதன் மூலம் மாற்றுத் திறனாளிகள் விடயத்தில் விஷேட கவனத்தினை உலக மக்கள் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுவாக மனிதர்கள் குறைபாடு உடையவர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்களது குறைபாடு மனிதனின் இயல்பான வாழ்க்கைக்கு தடையாக அமையும் போது அவர்களை மாற்றுத் திறனாளிகள் என நாம் கருதுகின்றோம். மாற்றுத் திறனாளிகள் எனும் பதமானது ஆரம்ப காலத்தில் Handicap எனும் சொற்பிரயோகம் கொண்டே அழைக்கப்பட்டது. handicap என்பது பிச்சை எடுப்பவர்களை அது சுட்டியதினால் அப்பதம் பொருத்தமற்றது எனக் கருதப்பட்டது. பின்னர் மாற்றுத் திறனாளிகள் இயக்கம் ஒன்று தங்களை Disabled என அழைக்கத் தொடங்கினர். அதிலிருந்து இப்பதமே கூடுதலாக உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகிறது. எனினும் மாற்றுத் திறனாளிகள், வலது குறைந்தவர்கள், ஊனமுற்றோர், அங்கவீனர்கள், எனவும் தமிழில் அழைக்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகள் யார் என்பது பற்றி பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறது

''ஒருவருக்கு பிறவியினால் அல்லது பிறவியின் காரணமாக இல்லாமல் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உடல் அல்லது உள ரீதியாக ஏற்படும் குறைபாட்டினால், இன்றியமையாத சாதாரண, தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கையில் அவனால் / அவளால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலை'' மாற்றுத் திறனாளிகள் என குறிப்பிட்டுள்ளது.

உலக தொழிலாளர் தாபனம் இதனைப் பற்றிக் குறிப்பிடும் போது ''அடையாளம் காணப்பட்ட உடல், உள ரீதியாக ஏற்படும் பலவீனத்தின் பெறுபேறு ஒரு தனிநபர் எதிர்பார்க்கும் போதியளவான, உயர்ந்த பாதுகாப்பான மற்றும் நீடித்து நிலைக்கும்

பொருத்தமான தொழில் ஒன்றினைப் பெற முடியாமல் இருக்குமாயின் இவர்கள் மாற்றுத் திறனாளிகள் எனக் குறிப்பிடுகின்றது.

டவுன்செென்ட் எனும் அறிஞர் விஷேட தேவையுடையவர்களை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தி உள்ளார். வழமைக்கு மாறான இழப்பு, நோய் நிலமை, மட்டுப்படுத்தப்பட்ட நாளாந்த செயற்பாடுகள், பிறழ்வு / விலகல் நடத்தை பிரதி கூல அணுகுமுறை காரணமாக ஏற்படுபவர்கள் மாற்றுத் திறனாளிகள் எனக் கருதுகின்றார்.

இலங்கையின் வரைவிலக்கணத்தின் படி ஒரு நபரால் தனது வெளிச் செயற்பாடுகளை எடுத்துச் செல்வதற்கு இயலாமை அல்லது கட்டுப்பாடுகள் காணப்படுதலாகும். அது அவர்களின் பிறவியின் காரணமாக நீண்ட கால உடல், உள ரீதியான வலது குறைவாக இருக்கலாம் என் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் பல்வேறு சட்டங்களும், தொழில் கொள்கைளும் பிரகடனங்களும் காணப்படுகின்றது. இந்த வகையில் 1983ம் ஆண்டு மாற்றுத்திறண் உள்ளவர்களுக்கான உலகச் நிகழ்ச்சி திட்டம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. ' உலகில் 500 மில்லியன் மாற்றுத் திறனாளிகள் காணப்படுகின்றார்கள் இவர்கள் உடல்,உள மற்றும் புலன்சார்ந்து பலவினங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இவர்கள் ஏனைய மனிதர்களைப் போல் சம வாய்ப்புக்களைப் பெறுவதில் உரிமையுடையவர்கள். அரசாங்கம் நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் மாற்றுத் திறனாளிகளுக்கு வாய்ப்புக்களைப் பெறவும் அதன் மூலம் நிலையான வாழ்க்கையினை அடைந்து கொள்ளவும் உறுதியளிக்க வேண்டும். ஊனத்தடுப்புக்கள், மறுசீரமைப்பு, சுய வாய்ப்பு, வாக்குரிமை, குடியிரப்பு வசதி, ஊதியம், பாதுகாப்பு, தொழிற் பயிற்சி, பொழுதுபோக்கு, கலை கலாச்சார நிகழ்ச்சிகள், மதம் மற்றும் விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு உறுதியளிக்கின்றது.

இதே போன்று 2006 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மாற்றுத் திறனாளிகள் தொடர்பான உரிமை பிரகடனத்தை வெளியயிட்டுள்ளது இதன் படி "மாற்றுத் திறனாளிகள் எந்த வகையான ஒதுக்குதல், வேற்றுமை காட்டல் மற்றும் பாகுபாடு போன்றவைகள் இல்லாமல் மகிழ்ச்சிகரமானதாக வாழ உரிமையுள்ளவர்கள் மாற்றுத் திறனாளிகள் மனித கௌரவத்தினை மதிப்பதற்கான இயல்பான உரிமைகளைக் கொண்டு இருக்கின்றார்கள்.

மாற்றுத் திறனாளிகளின் தோற்றம், இயல்பு, தீவிரத்தன்மை எதுவாக இருந்தாலும் நாட்டின் கூட்டு பிரஜைகளாக ஒரே இடிப்படை உரிமைகளைக் கொண்டு காணப்படுகிறார்கள். சாதாரனமானதும் முழுமையானதுமான ஒரு திருப்பதிகரமான வாழ்க்கையினை வாழ்வது உரிமைகளில் முதன்மையானதாகும்.

ஏனைய மனிதர்களைப் போல் சமமான சிவில், அரசியல் உரிமைகளைக் கொண்டு காணப்படுகிறார்கள். இவர்களுக்கு உள வைத்திய சிகிச்சைகள், சமூகப் புனர்வாழ்வு, கல்வி, தொழில், முதலுதவி, உளவளத்துணை, மற்றும் ஏனைய சேவைகளைப் பெறவும் அதன் மூலம் தமது திறன்கள், திறமைகளை, அபிவிருத்தி செய்து இயலுமானதாக்கி சமூகப் ஒருமைப்பாடு, மீள் ஒருமைப்பாடு என்பவற்றினைத் திறம்பட விரைவாக ஏற்படுத்தவும் உரிமையுண்டு. பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பினைப் பெற்றுத் திருப்திகரமான நிலையில் வாழ்வினை கொண்டு செல்ல உரிமையுடையவர்கள் எனக் குறிப்பிடுகிறது.

## 2.1 மாற்றுத்திறன் ஏற்படுவதற்கான காரணங்கள்

மாற்றுத்திறன் ஏற்படுவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

01. பிறப்பு
02. நோய்கள்
03. போசனைக் குறைபாடு
04. விபத்துகள்
05. மானிடக் காரணிகள்

### 2.1.1 பிறப்பு

மாற்றுதிறன் மிக்க பிள்ளைகள் பிறப்பினால் ஏற்படுதினைக் காணலாம் இதனை வைத்திய ரீதியில் "Down Syndrome" என குறிப்பிடுகின்றனர். பிறக்கும் போது உடலியல் ரீதியான குறைபாடுகளுடன் பிறத்தல், தட்டையான முகம், கண்களுக்கு இடையிலான இடை வெளி அதிகரித்துக் காணப்படல், கால் மெல்லிதாகக் காணப்படல், மூக்கு சிறியதாகக் காணப்படல் போன்ற பல குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறக்கும் போதே மாற்றுத்திறனுடன் பிறக்கின்றன. இது அதிகமாக வயதான தாய்மார்கள் கர்ப்பமுறுவதால் நிகழுக்கின்றன என வைத்திய அறிக்கைகளிலிலந்து அறிந்து கொள்ள முடிகிறது. 40

வயதுக்கு மேல் கர்ப்பமுறும் தாய்மார்களில் 50:1 என்ற ரீதியில் மாற்றுத்திறன் மிக்க குழந்தைகள் பிறக்கின்றன வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன.

## 2.12 நோய்கள்

மனிதன் பிறந்தது முதல் பல்வேறு நோய்களின் தாக்கத்துக்கு உட்பட்டவனாக காணப்படுகிறான். இதன் தீராத பாரிய நோய்கள் மனிதனை தாக்குகின்ற போது அவன் பல்வேறு ரீதியான உடல் பலவீனங்களுக்கு உட்பட்டு விடுகின்றான். இதன் போலியோ, எயிட்ஸ், சிறுநீரக செயலிழப்பு, எலும்புருக்கி நோய், ஆணைக்கால், நீரிழிவு, டெங்கு போன்றவற்றினால் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகளுக்கு உட்படுவதினால் குறைபாடுடையவனாக மாறுகின்றான்.

## 2.13 விபத்துக்கள்

உலகின் அதிக முன்னேற்றத்தினால் போக்குவரத்து, கைத்தொழிற்சாலைகளின் அளவு இன்று அதிகரித்துள்ளது. இதனால் பல்வேறு நன்மைகளை மனிதன் அடைந்து கொள்ளும் அதே வேளை அதனால் ஏற்படும் பல்வேறு விபத்துக்களையும் அவன் அடைகின்றான். இதனால் உடலியல் குறைவுகளுக்கு உட்பட்டு மாற்றிதிறன் மிக்கவாகளாக மாறுகின்றான். இலங்கையில் 2011 ம் ஆண்டு மாத்திரம் ஏழு மாதங்களுக்குள் 301,000 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விபத்துக்களினால் கை, கால், உடலியல் கூறுகளை இழந்து மனிதன் மாற்றுத்திறன் உடையவனாக மாறுவதினை அதிகமாக காணமுடிகிறது. இதற்கு காரணம் பிரயாணிகளின் அசிர்த்தை, வேகமாக வாகனத்தை ஓட்டிச் செல்லுதல், பாதசாரிகளின் கவனிமின்மை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

அத்தோடு அதிகரித்த கைத்தொழில் நடவடிக்கையின் காரணமாகவும் கைத்தொழில் சாலைகளில் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. கைத்தொழில்சாலைகளில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களில் ஏற்படும் விபத்துகளினால் மாற்றுதிறன் மிக்கவர்கள் உருவாக்கப்படவதினைக் காணலாம்.

## 2.14 போசனைக் குறைபாடு

இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையின் படி இலங்கையில் மொத்த சிறுவர்களில் 4% மானோர் மாற்றுதிறன் உள்ளவாகளாக காணப்படுகின்றனர். இதன் படி இவர்கள் விட்டமீன்

A குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர்களுக்கு போதியளவு போசனை கிடைக்காமல் போகும் சந்தர்ப்பத்தில் அவர்களின் மூளை வளர்ச்சி, உடலியல் வளர்ச்சிகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் சிறுவர்கள் மாற்றுத்திறன் மிக்கவர்களாக மாறுகின்றனர்.

## 2.15 மனித செயற்பாடுகளினால் ஏற்படும் அனர்த்தங்கள்

மனித செயற்பாடுகள் எனும் இலங்கையில் யுத்தம் மற்றும் இன வன்முறைகளைக் குறிப்பிடலாம். யுத்ததினால் எத்தனை பேர் மாற்றுத்திறன் மிக்கவர்களாக மாறியுள்ளனர் என்பது பற்றிய போதிய தகவல்கள் இல்லை. எனினும் 1998 ன் கணிப்பீட்டின் படி இலங்கையில் 10,000 பேருக்கு 24 பேர் மாற்றுத்திறனுக்கு உட்பட்டுள்ளனர் எனவும், 2001ம் ஆண்டு கணிப்பீட்டின் படி 10,000 பேருக்கு 27 பேர் பாதிப்புறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. 30% சிறுவர்கள் கண்ணி வெடிகளினால் பாதிக்கப்படுவதாகவும் தகவல்கள் காணப்படுகிறது. கண்ணி வெடிகளினால் அதிகமான ஆண்கள் கால்களை இழந்துள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரை மாற்றுத்திறன் மிக்கவர்களில் அதிகமானோர் மானிட செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

# அத்தியாயம் 3

## 3.0 இலங்கையில் மாற்றுத் திறனாளிகள் பற்றிய கண்ணோட்டம்

உலக சனத்தொகையில் சுமார் 65 கோடி மக்கள் மாற்றுத் திறனாளிகளாக காணப்படுகின்றார்கள். இதன்படி அதில் அதிகமானோர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் முதன்மையானதாக காணப்படுகிறது.

இலங்கை கடந்த 30 வருட காலத்தில் ஏற்பட்ட கொடூரமான யுத்ததிலிருந்து விடுபட்டு இன்று அபிவிருத்தி செயற்பாடுகளில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் காணப்படும் மாற்றுத் திறனாளிகளின் விடயத்திலும் கவனம் செலுத்துதல் முக்கியமானதர்கும். இலங்கையில் மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக பல்வேறு சட்ட திட்டங்கள் காணப்படுவதினைக் காணமுடியகிறது. இதன்படி இலங்கையிவ் காணப்படும் சட்டங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. அறவாணிகள் மற்றும் விதவைகள் ஓய்வூதியச் சட்டம்
2. பொது நிர்வாக சுற்று நிரூபம் இலக்கம் 27/ 88
3. பார்வையற்றவர்கள் புனர்வாழ்வுக்கான நம்பிக்கை நிதியச் சட்டம் (1992)
4. மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் (1996)
5. சய சமூகப் பாதுகாப்புச் சட்டம் (1996)
6. ரணவிரு சேவா சட்டம்
7. ஊழியர் நம்பிக்கை நிதியம்

மாற்றுத் திறனாளிகள்களை பல்வேறு வகைளாக பிரித்து நோக்கமுடியும். எனினும் இவர்களின் குறைகள் ரீதியாக ஆராய்வதே சிறப்பானதாகும். இதன்படி விஷேட தேவையுடையோரை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

01. உடல் ரீதியான மாற்றுதிறன் உடையோர் :- இதில் பார்வைக் குறைபாடு, பேச்சு, கேட்டல் குறைபாடு, கைகாலில் ஏற்படும் குறைபாடு, கால்களில் ஏற்படும் குறைபாடு, இயங்குதலில் ஏற்படும் குறைபாடு நீண்ட கால நோய்கள், பேன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

02. உள ரீதியான மாற்றுத்திறன் :- கற்றல் சார்ந்த மாற்றுத்திறன், அல்சீமெர் நோய், பயம், ஒழுங்கற்ற பதக்களிப்பு, மன அழுத்தம், மன அழுத்தத்தின் போது எதிர்மறையாக சிந்தித்தல், மூளைக் கோளாறு, வளர்ச்சி சார்ந்த மாற்றுத்திறன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

03. ஏனைய மாற்றுத் திறன்கள் :- மதுபாவனை, புகையிலைப் பாவனை, சட்டவிரோதமான போதைப் பொருள் பாவனை, போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## 3.1 இலங்கையில் மாற்றுத் திறனாளிகள் பற்றிய புள்ளி விபரங்கள்


இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கையானது அதிகரித்து வந்துள்ளதைக் காண முடிகிறது. 1981 ம் ஆண்டு 557 000 பேர் காணப்படுகின்றனர். 1992ம் ஆண்டுகளில் 682000 பேரும் காணப்படுகின்றனர். 2001ம் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைகக்களத்தின் தகவலின் படி பின்வரும் அட்டவணையின் மூலம் காட்டப்படுகிறது.

| **வயது** | **மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 0 - 4 | 4851 |
| 5 – 9 | 11681 |
| 10 – 14 | 14246 |
| 15 – 19 | 15168 |
| 20 - 24 | 18244 |
| 25 - 29 | 17601 |
| 30 – 34 | 18681 |
| 35 - 39 | 19219 |

| வயது | **மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 40 – 44 | 18743 |
| 45 – 49 | 18478 |
| 50 – 54 | 18775 |
| 55 – 59 | 15867 |
| 60 – 64 | 14931 |
| 65 – 69 | 16150 |
| 70 - 74 | 16042 |
| 75 - 79 | 12982 |
| 80 மேல் | 16625 |

மூலம் இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2001)

இலங்கையில் விஷேட தேவையுடையவர்களை பால் அடிப்படையில் நோக்கும் போது 116,265 பெண்களும் 158,446 ஆண்களும் காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபு மூலம் காட்டலாம்.





மூலம் -இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

இலங்கையில் மாற்றுத் திறனாளிகள் அவர்களின் இழப்பின் அடிப்படையில் புள்ளிவிபரங்களை பின்வரும் அட்டவணையின் மூலம் காட்டுகின்றது.

| வகை | பார்வைக் குறைபாடு | கைகளில் ஏற்படும் குறைபாடு | உள ரீதியான குறைபாடு | பேச்சு / கேட்டல் குறைபாடு | கால்களில் ஏற்படும் குறைபாடு |
|---|---|---|---|---|---|
| பிறப்பு | 10469 | 10839 | 34446 | 44990 | 22567 |
| நோய் | 35270 | 19116 | 20258 | 17985 | 36310 |
| வீதி விபத்துக்கள் | 824 | 2128 | 661 | 517 | 5958 |
| தொழிலிடம் . தொழிற்சாலை | 2416 | 3244 | 418 | 389 | 2790 |
| கலவரம் ∴ வன்முறை | 894 | 1232 | 459 | 209 | 796 |
| ஏனைய விபத்துக்கள் | 4774 | 3751 | 1744 | 1420 | 6682 |
| யுத்தம் | 937 | 1974 | 241 | 487 | 5085 |

மூலம் -இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்




மூலம் -இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

### 3.2 இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் தொழில் வாய்ப்பு


இலங்கையில் தொழில் வாய்ப்பு அண்மைக் காலமாக அதிகரித்து வருவதினைக் காணலாம். இதில் இலங்கையில் மாற்றுத் திறனாளிகளிக்கு விஷேட சட்டங்கள் காணப்படுகிறது. இதன்படி பொது நிருவாகக் கட்டளைச் சட்டம், அரச நிறுவனங்கள் மற்றும் பொதுப் தாபனங்களில் மாற்றுத் திறனாளிகள்க்கு 3% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. இலங்கையில் 16.1% மான மாற்றுத் திறனாளிகள் தொழில் புரிந்து வருவதாக குறிப்பிடுகிறது.

| பால் | மொத்தம் | தொழில் | குடும்பம்/ உறவினர்க | அரசாங்கம் / னங்களின் | பிச்சை எடுப்பவர்கள் | ஏனையோர் | திட்டமாக குறிப்பிட முடியாதவர்க் |
|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 274711 | 39512 | 201264 | 16969 | 1025 | 158556 | 76 |
| % | 100 | 14.4 | 73.3 | 6.2 | 0.4 | 5.8 | 0.0 |
| ஆண் | 158446 | 33594 | 104606 | 9285 | 758 | 10152 | 51 |
| % | 100 | 212 | 66 | 5.9 | 0.5 | 6.4 | 0.0 |
| பெண் | 116265 | 5919 | 96666 | 7684 | 267 | 5704 | 25 |
| % | 100 | 5.1 | 83.1 | 6.6 | 0.2 | 4.9 | 0.0 |

மூலம் - இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

அட்டவணையினை வைத்து நோக்கும் போது இலங்கையில் 14.4% மானோர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. குடும்பங்களிலும் உறவினர்களிடமும் தங்கிவாழ்வோர்கள் 73.3% காணப்படுவதினைக் காணலாம். எனினும் இலங்கையில் 200,000 மாற்றுத் திறனாளிகள் தொழில் புரியக் கூடிய நிலையில் இருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறிப்பட்டுள்ளது.

இலங்கையில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்த 19 வாழ்க்கை தொழிற்பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றது. இவற்றில் 3% மானவர்கள் மாத்திரமே மாற்றுத் திறனாளிகள் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் இதனை கீழ் வரும் வரைபு காட்டுகிறது.




மூலம்- இலங்கை குடித்தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்

## 3.3 இலங்கையில் மாற்றுத் திறனாளிகளிகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்

இலங்கையில் ஏனைய சாதாரண மனிதர்களைப் போல் கௌரவத்துடனும், மரியாதையுடனும் வாழவே மாற்றுத்திறனாளிகள் எதிர்பார்க்கின்றனர். எனினும் சமுதாயத்தின் குருகிய மனப்பாங்கு அவர்களுக்குண்டான தயக்கம் என்பன அவர்களை சுதந்திரமாக இயங்குவதில் தடைகளை ஏற்படுத்துகின்றன. அவற்றினை நீக்கி மாற்றுதிறன் மிக்க இவர்களை சமுதாயத்தில் முன் கொண்டுவர அரச, அரசசாரா நிறுவனங்கள் பல்வேறு முனைப்புடன் இயங்கி வருதினைக் காணலாம். இதன் படி இலங்கையில்

மாற்றுதிறன் மிக்கவர்களை வாழ்வதார ரீதியாக கட்டியெழுப்ப பல செயற்றிட்டங்கள் காணப்படுகின்றன அவற்றினை பின்வருமாறு நோக்கலாம்.

1. இலங்கையில் கண்பார்வையற்றொருக்கான மன்றம், இலங்கை பார்வை குறைபாடுடையவாகளின் சங்கம் ஆகியன இணைந்து தேசிய கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு பார்வையற்றவர்களுக்கான தொழில், கல்வி, போன்றவற்றினை பெற்றுக் கொடுக்க வாய்ப்பளிப்பதுடன் பார்வையற்றவர்கள் இலகுவான முறையில் செயற்படுவதற்காக பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகிறது.
2. காது கேளாதோர் கூட்டு நிறுவனம் காதுகேளாதவர்களின் தொழில், தொழிற்பயிற்சி என்பவைகளை பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சீதுவ, காது கேளாதோர் பாடசாலை, SHIA என்ற சர்வதேச தொண்டர் தாபனமும் கல்வி, தொழிற்பயிற்சிகளை வழங்கி வருகின்றன.
3. மாற்று திறனுள்ள பெண்களுக்கான சங்கம் இலங்கையில் வாழும் மாற்றுதிறனுள்ள பெண்களின் உரிமைக்காகவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை பேணுவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
4. ரணவிரு சேவா அதிகார சபை படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கங்களை இலக்காக கொண்டு செயற்படுகின்றது. யுத்ததில் காயப்பட்டு விஷேட தேவையுடையோராக மாற்றப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகளை செய்து வருகின்றது.
5. மகாவலி அதிகார சபை, S,C,F,U,K நிறுவனத்துடன் இணைந்து மாற்றுதிறனுள்ள பிள்ளைகளின் தாய்மாருக்கு நிதி உதவிகளை வழங்குகிறது. இது இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படுகிறது. பிள்ளைகள் குழுக்களுக்கு வழங்குதல், தாய்மார்கள் குழுக்களுக்கு வழங்கதல், என நிதி உதவிகளை வழங்கி வருகிறது.
6. இலங்கையில் டெய்சி லங்கா நிதியம் விஷேட தேவையுடையவர்களை தொழிநுட்ப ரீதியாக வலூவூட்டி வருகிறது.. அந்தவகையில் இவர்களுக்கு தொழிநுட்ப ரீதியாக வலூவூட்டுவதற்காக கணனிகள், இறுவெட்டுக்கள், பார்வையற்றவர்கள் படிப்பதற்கான அச்சு முறை மற்றும் திரையில் வாசிப்பதற்கான

மென்பொருள்கள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

இலங்கை அரசு மாற்றுத் திறனாளிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை வழங்கி வருதினைக் காணலாம். இலங்கையில் மேற்கொள்ளப்படும் விஷேட தேவையுடையோருக்கான நிகழ்ச்சி திட்டங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. சமுதாய மட்டத்திலான தேசிய புனருத்தாபன நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சினால் தற்காலத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய வலூவூட்டல் திட்டமாகும். இதனது நோக்கம் மாற்றுதிறன் மிக்கவர்களை இனம் கண்டு அவர்களை வாழ்வாதார ரீதியாக கட்டியெழுப்புவதும், அவர்களது கல்வி ரீதியாக அவர்களை உயர்வடையச் செய்வதாகும். இதன் படி 22 மாவட்டங்களில் 242 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வெலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வேலைத்திட்டத்தின கீழ் தேசிய,, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டம் எனப் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு அமைச்சுக்களையும் பல்வேறு திணைக்களங்களையும், பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களையும் மற்றும் வளவாளர்களையும் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளதுடன் மாற்றுதிறனுள்ளவர்களையும் அவர்களின் குடும்பத்தினையும் அபவிருத்தி செய்வது தொடர்பான பொறுப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

02. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் விஷேட தேவையுடையோருக்கான செயலகத்தின் விஷேட கல்வி உபாயத்திட்டம் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி திட்டம் 03 பாடநெறிகள் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாற்றுத் திறனாளிகள் எழுதவும், வாசிக்கவும், பிரெயில் முறையை சமூகத்தில் நடைமுறையாக்குதல், சைகையடையாள பாஷையை சமூகத்தில் அறிமுகப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

03. அத்தோடு அரச மற்றும் பொது இடங்களில் உட்பிரவேசிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொதுவிடங்கள் என்ற வகையில் கௌரவ அமைச்சரின் அலுவலகம், மருதானை, கொட்டுவ, கொம்பனித்தொரு, இரத்மலானை, றாகம மற்றும் சீதுவ போன்ற புகையிருத நிலையங்களிலும் கண்டி, களுத்துறை, போன்ற மத்திய மேல் மாகாணங்களிலுள்ள மாவட்ட பிரதேச அலுவலகங்களிலும் உட்பிரவேசிப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


# அத்தியாயம் - 04

## 4.0 பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி பிரதேசங்களில் மாற்றுத் திறனாளிகளின் பற்றிய மதிப்பீடு


ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாலமுனை, ஒலுவில் திராய்க் கேணி பிரதேசமானது தமிழ் மொழியைக் கொண்டவர்களாகவும் பாலமுனை, ஒலுவில் பிரதேசத்தில் வாழும் 99% மானோர் முஸ்லிம் ஆவர்கள். திராய்க்கேணி பிரதேசத்தில் வசிக்கும் மக்களில் 80% மானோர் தமிழர்களாவர் மிகுதி 20% முஸ்லிம்களாவர்.

இப்பிரதேசமானது கிராமிய முறையில் அதிகம் தங்கி காணப்படும் பிரதேசமாகும். இங்கு வெவ்வேறு ரீதியான தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருதினைக் காணக்கூடியதாக உள்ளது. பாலமுனைப் பிரதேச மக்கள் பிரதானமாக விவசாயத்திலும், திராய்க்கேணி பிரதேச மக்கள் சேனைப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஒலுவில் பிரதேச மக்கள் மீன்பிடியிலும், விவசாயத்திலும் அதிகம் தங்கியுள்ளதினைக் காணக்கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தில் சனத்தொகையினை நோக்கும் போது பாலமுனைப் பிரதேசத்தில் 8747 பெரும் ஒலுவில் பிரதேசத்தில் 8590 பேரும் திராய்க்கெணி பிரதேசத்தில் 489 பேரும் வசிக்கின்றனர். ஆய்வுப் பிரதேசத்தில் 2% மானோர் விஷேட தேவையுடையோரக காணப்படுகின்றனர். இதனை பின்வரும் வரைபின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்





ஆய்வுக்குட்படுத்தப்படும் பாலமுனை, ஒலுவில், திராய்கேணி பிரதேசங்களில் சனத்தொகையுடன் தனித்தனியாக ஒப்பிடும் போது மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை கீழ்வரும் வரைபுகள் மூலம் காட்டப்படுகிறது.





தரவு – கள ஆய்வு

பாலமுனை பிரதேசத்தில் 8747 பேர் காணப்படுகின்றனர். இதில் மாற்றுத்திறனாளிகளாக 112 பேர் காணப்படுகின்றனர். இவர்கள் சனத்தொகையில் 1% னராக காணப்படுகின்றனர். ஒலுவில் பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளினை நோக்கும் போது பின்வரும் வரைபு விளக்குகிறது.




ஒலுவில் பிரதேசத்தின் மொத்த சனத்தொகையானது 8590 ஆகும். இங்கு காணப்படும் விஷேட தேவையுடையவர் 161 பேராக காணப்படுகின்றனர். மொத்த சனத்தொகையுடன் இவர்களை நோக்கும் போது இது 2% மாகும். திராய்க்கேணி பிரதேசத்தினை நோக்கும் போது





திராய்க்கேணி பிரதேசத்தில் குறைவான சனத்தொகையே காணப்படுகிறது. திராய்க்கேணியில் 489 பேர் காணப்படுகின்றனர். இதில் மாற்றுத் திறனாளிகளாக 22 பேர் காணப்படுகின்றனர். இதற்கு இப்பிரதேசத்தில் நிலவும் வறுமை, நோய், யுத்தம் என்பன காரணமாக அமைகிறது.


### 4.1 பிரதேச ரீதயாக மாற்றுத்திறனாளிகளின் குறைபாடுகள் ரீதியான நோக்கு

ஆய்வுப் பிரதேச பல்வேறு குறைபாடுகளைக் கொண்டு மாற்றுத் திறனாளிகள் காணப்படுவதினைக் காணாலாம். இதில் கால்களை இழந்தோர், கைகளை இழந்தோர், கண்களை இழந்தோர், மற்றும் வேறு காரணிகள் என்ற வகையில் ஊமைகள், புத்தி சுயாதீனமுற்றோர், குறிப்பிட முடியாத உடல் பலவீனமுடையவர்கள் என்று பலவகைப்படுத்தி நோக்கலாம்.


ஒலுவில் பிரதேசத்தில் காணப்படும் மாற்றுத்திறனாளிகள் கண்களை இழந்தோர் 14% மும், கைகளை இழந்தோர் 19% மும், கால்களை இழந்தோர் 27% மும் காணப்படுகின்றனர். வேறு காரணங்களால், 40% மானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.




பாலமுனைப் பிரதேசத்தில் கால்களை இழந்தோர் 28% ஆகவும் கைகளை இழந்தோர் 11% மாகவும், கண்களை இழந்தோர் 8%, வேறு அவயங்கள் இயங்க முடியாமல் போனோர் 53% ஆகவும் காணப்படுகின்றனர்.




திராய்க்கேணி பிரதேசத்தில் மாற்றுத்திறன் உள்ளவர்களில் கால்களை இழந்தோர் 36% மாகவும், கைகளை இழந்தோர் 23% மாகவும் கண்களை இழந்தோர் 9% ஏனைய உடல் பலவீனங்களால் பாதிக்கப்பட்டோர் 32% மாகவும் காணப்படுகின்றனர்.





ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுதிரன் உள்ளவர்கள் பல்வேறு காரணங்களினால் மாற்றுதிறனாளர்களாக மாறியுள்ளனர். இவர்களில் நான்கு பிரதான காரணிகளினால் மாற்றுத் திறனாளிகள்ாக மாறியுள்ளனர்.

1. பிறப்பு
2. நோய்
3. யுத்தம / இனவன்முறை
4. விபத்துக்கள்

ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து 295 பேர் நோய், பிறப்பு, யுத்தம் அல்லது இனவன்முறை, விபத்து போன்ற காரணிகளினால் மாற்றுத்திறன் உள்ளவர்களாக உள்ளனர். இதில் பிறப்பினால் 25% பேரும் யுத்தம் மற்றும் இனக் கலவரத்தினால் 12% பேரும் விபத்துக்களினால் 17% பேரும் நோயினால் 41% பேரும் ஏனைய காரணங்களினால் 15% மாற்றுத்திறன் உள்ளவர்களாக காணப்படுகின்றனர்.


இதனை பின்வரும் வரைபு காட்டுகிறது




மூலம் - களஆய்வு

## 4.2 ஆய்வுப் பிரதேசத்தில் மாற்றுத்திரனாளிகளின் வாழ்க்கைத் தரம்

ஆய்வுப்பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரம் பின்தங்கியே காணப்படுவதினைக் காணக் கூடியதாக உள்ளது. அத்தோடு அவர்களை கொண்டுள்ள குடும்பமும் ஏனைய குடும்பங்களுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையிலயே காணப்படுகின்றனர். மாற்றுத்திறனாளிகளில் 10%னரே தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.




தரவு - கள ஆய்வு

இத்தொழில் வாய்ப்புக்களைப் பெற்றோரில் ஓடாவி தொழில், வியாபாரம், சிறு கைத்தொழில் ,அரச தொழில்கள் என்பன மேற்கொள்கின்றனர். இவர்களுடைய பொருளாதார நிலையை நோக்கும் போது வறிய நிலைமையிலயே காணப்படுகின்றனர். இவர்களை சுமக்கும் குடும்பத்தினரின் தலாவருமானம் 300 ரூபாய்க்கும் குறைவாகும். இவர்களின் மருத்துவச் செலவு மற்றும் பராமரிப்பு என்பன கடினமானதாக உள்ளது.

# அத்தியாயம் - 5

## 5.0 முடிவுரை

மாற்றுதிறனாளிகள் என்பது ஒரு குறையோ அல்லது குற்றவாளிகளோ அல்ல. அவர்கள் இச்சமூக உருவாக்கத்தின் பங்குதாரர்கள். அவர்களுக்கும் சமூகத்தில் முக்கிய பங்கு உண்டு. தற்போது மாற்றுத் திறனாளிகள் சாதனையாளர்களாகவும் போட்டி போட்டு முன்னேறக் கூடியவர்களாகவும் காணப்படுகிறார்கள். அபிவிருத்தியடைந்து வரும் எமது நாட்டிலும் இவர்களின் முன்னேற்றம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இவ்வாய்வானது பேட்டி முறை, கலந்துரையாடல் முறை, அவதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் வாழும் மாற்றுத் திறனாளிகள் அதிகமாக பாடசாலை செல்லாதவர்களாகவும் எழுத்தறிவு குறைவாகவும் காணப்படுவதினால் வினாக்கொத்துக்களைப் பயன்படுத்த முடியவில்லை. எனினும் இப்பிரதேசத்தில் காணப்படும் 75% வீதமான மாற்றுத்திறனாளிகள் ஆய்வின் போது பேட்டி காணப்பட்டுள்ளனர்.

இவ்வாய்வின் மூலம் இப்பிரதேசத்தில் காணப்படும் மாற்றுதுதிறனாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு இப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார நிலை பற்றிய தரவுகள் பெறப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் வாழும் அதிகமான மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரம் பின்தங்கியே காணப்படுகின்றது

ஆய்வுப் பிரதேசமான பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி பிரதேசத்தில் காணப்படும் சனத்தொகையில் மாற்றுத் திறனாளிகள் 1% ஆக காணப்படுகிறது. இவர்கள் சனத்தொகையுடன ஒப்பிடுகையில் குறைவாயினும் இசர்களினால் சமூகத்தில் பல்வேறு தாக்கங்கள் காணப்படுகிறது. இவர்கள் மற்றவருடன் தன்னை ஒப்பீட்டு தாழ்நிலைக்கு செல்வதுடன் இதன் விளைவால் தான் தாங்கியிருக்கும் குடும்பங்களையும் பிரச்சினைக்குள் உள்ளாக்குகின்றனர். அத்தோடு இவர்களின் மருத்துவ செலவு அதிகரிக்கின்றது. இதனால் அக்குடும்பம் பொருளதார ரீதியாக பின்தங்கி செல்வதற்கும் காரணமாகின்றது.

இத்தோடு அக்குடும்பம் குடும்ப உறவுகளிடையே பின் தள்ளப்பட்டு அக்குடும்ப உறவுகள் பிரிந்து செல்லும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. மாற்றுத்திறனாளிகள் மன உளச்சலுக்கு உட்படுவதுடன் குடும்பம் மனஉளச்சலுக்கு உள்ளாகின்றது. அத்தோடு அக்குடும்பம் சமூகத்தின் முன் வராமல் ஒதுங்கி காணப்படும். எனவே இவ்வாய்வு பிரதேசத்தில்

நிலவுவது போன்றே ஏயைன பிரதேசங்களிலும் இந்நிலை தொடருமாயின் நாட்டில் மருத்துவ செலவு அதிகரித்தல், இறப்பு வீதம் அதிகரித்தல், தங்கி வாழ்வோர் அதிகரித்தல், கல்வியறிவு பின்தங்கி காணப்படல், நாட்டின் அபிவிருத்தி சுட்டிகள் பாதிப்படையக் கூடிய நிலை காணப்படுகிறது. எனவே இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு என்பது இன்றியமையாதாக காணப்படுகிறது.

## 5.1 பாலமுனை, ஒலுவில் திராய்க்கேணி பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றுவதற்கான சிபாரிசுகள்

இலங்கையில் வேற்று பிரதேசங்களில் காணப்படுவது போன்று இவ்வாய்வு பிரதேசத்திலும் மாற்றுதிறனாளிகளுக்கு கல்வி வழங்கும் நிலையங்களை உருவாக்குதல்

- மாற்றுதிறனாளிகளுக்கு தொழிற்பயிற்சியை முறையாக இனங்க கண்டு வழங்குதல்
- மாற்றுத் திறனாளிகளுக்கு மன தைரிய மூட்டல்
- மாற்று திறனாளிகளுக்கு முதலீட்டு ஊக்குவிப்புகளை மேற்கொள்ளுதல்
- அரசானது கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் இட ஒதுக்கீட்டினை அதிகரித்து ஊக்குவிப்பு வழங்குதல்
- புதிய தொழிநுட்ப உலகை எதிர் நோக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு கணனி அறிவினை வழங்குதல்
- அரச, அரச சாரா நிறுவனங்கள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரண நிதி உதவிகளை வழங்குதல்.
- மாற்றுத் திறனாளிகள் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கு போதிய வருமானத்தைப் பெறக்கூடிய ஊக்குவிப்பு திட்டங்களை மேற்கொள்ளுதல்
- அத்தோடு சமூகமானது மாற்று திறனாளிகளை மூன்றாம் தர பிரஜைகளாகவும், குற்றவாளிகளாகவும் பார்க்கின்றது அவற்றினை தடுத்து அவர்களும் இச்சமூகத்தின் பங்காளிகள் அவர்களை மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்துவதற்கு இச் சமூகத்தின் உள ரீதியான மாற்றங்களை கொண்டு வர முனைப்பான செயற்றிட்டங்கள் அரசினாலும் தொண்டர் அமைப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்ளும் போது இச்சமூகத்தில் மாற்றுதிறனாளிகள் வீட்டை விட்டு வெளிவந்து வெளிச் செயற்பாடுகளையும், தொழில் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும்.

இவ்வாய்வானது ஓர் ஆரம்ப கட்ட முயற்சியாகும். இனிவரும் காலங்களிலும் இப்பிரதேசத்தில் மாற்றுத்திறனாளிகள் பற்றி ஆய்வுகள் மேற் கொண்டு அவர்களை சமூகத்தில் சிறப்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் பிரதேச அபிவிருத்திக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பளிக்க வேண்டிய நிலைமையை கொண்டு வர அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. Dr. Karana,G.N (1999) " United Nation and Rights of Disabled: A Study in Indian Prespective" APH Publishing corporation, New Dilhi pp 40 -60.
2. Asha Hans and Annie (19990 "women, Disabilty and Identity" thousend Oaks london, Sage publication, New Delhi pp: 190 -219.
3. Saddhanada, KWS. (2001) "Analysis of Disability stastics in srilanka – 2001, Department of census and stastics, srilanka. p: 1 -10
4. சண்முகம், எஸ், (2003) " ஊனத்தினை வென்ற சாதனையாளர்கள்" அரும்பு பதிப்பகம், சிக்மா அச்சகம், சென்னை பக் - 1 -30
5. ராஜ்குமார் ஆர்.சி. (2001) "உங்களை நோக்கி" அருணா பதிப்பகம் வெள்ளவத்தை, கொழும்பு. பக் 53 -60
6. பெரேரா, எம்.ஆர்.எஸ் ((2007) "உளவளத்துணை" சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு உளவளத்ணைப் பிரிவு, சாந்தி அச்சகம், பத்ரமுல்ல, பக் - 26 – 40
7. Information on Disabled person (2003), census of population and housing – 2001, Department of census stasticics, srilanka – pp 1 -14
8. சின்கிளேயர் பீற்றர் (2009), அங்கவீனமுள்ளவர்களின் உரிமைகள், நிலநோக்கு, இதழ் 4 பக் - 10
9. ரசீன் ஜே.டி.எம். (2006) விஷேட உதவி தேவைப்படும்மாணவர்களும் கல்வியும், கலையமுதம், அரச ஆசிரியர் கல்லூரி,அட்டாளைச்சேனை, பக் 60 -61
10. அங்கவீனமுற்ற நபர்களுக்கான சர்வதேச தினம் (2008), சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், பத்ரமுல்ல, பக் - 1 -30
11. தயாசீலன் "விஷேட தேவையுடையவர்கள் இருப்பின் அவர்களுக்கு ஒளியுள்ள எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்" வீரகேசரி (04.02.2010)
12. சேவியர் "கைகளில்லை, கால்கலில்லை கவலைகளுமில்லை" எங்கள் தேசம் (25.09.2009)

13. காமில், எம்.யு.எம். அங்கவீனர்களையும் அரவணைப்போம்'' தினகரன் (20.12.2009)

14. சமூக சேவைகள் பிரிவு அட்டாளைச்சேனை பிரதேச சபை (2010)

15. www.das.kucrl.org

16. www.satastics.gov.lk

17. www.adp.org

18. www.wikipidia.org

19. www.ecsatlanka.org

20. www.parks.ca..gov

21. www.ndmc.gov.lk

22. www.disabilitiesweb.com

23. http://www.DisabledArtistsNetwork.net

24. http://www.un.org/disabilities/default.asp?id=110

**பேட்டி ஆய்வில் பங்குபற்றியவர்கள் விபரம்.**

| இல | பெயர் | வயது | முகவரி |
|---|---|---|---|
| 1. | எஸ். கிதாயா | 11 | 23, பொதுக் கிணற்று வீதி பாலமுனை |
| 2. | எம். முகைதீன் பாவா | 65 | 129. ஜீ எஸ் வீதி ஒலுவில் |
| 3. | எம். வீ. றம்ழான் | 38 | எச் 10 ஹுசைனியா நகர் பாலமுனை |
| 4. | கே. ஜென்னத்து வீவி | 15 | 211, தபாலக வீதி பாலமுனை |
| 5. | எம்.எப். நிஷா | 5 | 19.ஃயு பிரதான வீதி ஒலுவில் |
| 6. | எல்.எம். பைரூஸ் | 13 | 46 துறைமுக வீட்டு திட்டம் ஒலுவில் |
| 7. | ஏ.எல். சபானா | 9 | 88 கடற்கரை வீதி பாலமுனை |
| 8. | கே.நில்ஹாம் | 12 | ஒலுவில் |
| 9. | ஜே. நிஜாம் | 12 | ஒலுவில் |
| 10. | எப். றியானா | 22 | 3 சின்னப்பாலமுனை பாலமுனை |
| 11. | கா. திபவனீதன் | 8 | 19 சனசமூக வீதி திராய்க்கேனி |
| 12. | ஜி. வினோஜா | 15 | திராய்க்கேணி |
| 13. | எஸ். கார்த்தி | 43 | 45 கோயில் வீதி திராய்க்கேனி |

# இணைப்பு

ஆய்வின் போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள்



ஒலுவில் உள்ள மாற்றுதிறனாளி



பாலமுனை உள்ள மாற்றுதிறனாளி



பாலமுனை உள்ள மாற்றுதிறனாளி



திராய்க்கேணி உள்ள மாற்றுதிறனாளி

